# செந்தமிழ்

தொகுதி : 93 ஜூலை 1999 பகுதி : 7

## திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்,. பி.எச்.டி.,

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி, | தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே.எஸ்.டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஜயா | உறுப்பினர் |
| திரு. அ. தட்சிணாமூர்த்தி | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல் | மதுரை |
| பேரறிஞர் | செ. கந்தசாமி | முதல்வர் |
| பேரறிஞர் | ம.ரா.போ. குருசாமி | கோயம்புத்தூர் |
| பேரறிஞர் | ச. மெய்யப்பன் | சிதம்பரம் |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன் | மதுரை |
| பேரறிஞர் | கு. துரைராசு | எட்டையபுரம் |
| பேரறிஞர் | அ.அ. மணவாளன் | சென்னை |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன் | அல்லூர், திருச்சி |
| பேரறிஞர் | அ. தட்சிணாமூர்த்தி | தஞ்சாவூர் |
| பேரறிஞர் | எஸ்.எம். கமால் | இராமநாதபுரம் |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி | மதுரை |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன் | மதுரை |
| பேரறிஞர் | அ.மா. பரிமணம் | தஞ்சாவூர் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ 6 | |


மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

# பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் ... 223
*பேரறிஞர் நா. பாலுசாமி*

2. சாதிமத வேற்றுமையும்
சமுதாய ஒற்றுமையும் .... 236
*நாவலர் ச. சோ .பாரதி*

4. இரு போகம் .... 254
*பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி*

3. பதிற்றுப்பத்தின் சொற்கொடை ... 257
*பேரறிஞர் அ.மா. பரிமணம்*

- *பேரறிஞர்* நா. பாலுசாமி

*(முன் இதழ்த் தொடர்ச்சி)*

**சூத்திரம் 297**

## உரியியல்

### *(உரிச்சொல் இலக்கணம்)*

உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபில் சென்றுநிலை மருங்கில்
எச்சொல் ஆயினும் பொருள்வேறு கிளத்தல்

(ப-ரை) உரிச்சொல் கிளவி - உரிச்சொல்லின் இலக்கணத்தை, விரிக்குங்காலை - விரித்துக்கூறுங்கால், இசையினும் குறிப்பினும் பண்பினும் - இசை, குறிப்பு, பண்பு என்ற மூன்றின் அடிப்படையில் தோன்றி, பெயரினும் வினையினும்- பெயா, வினைகளோடு உருமாறி, ஒருசொல் பல பொருட்கு உரிமை தோன்றினும் - ஓர் உரிச்சொல் பலபொருள் தரினும், பலசொல் ஒரு பொருட்கு உரிமை தொன்றினும் - பலசொற்கள் ஒரே பொருளைத்தரினும், பயிலாதவற்றை - வழக்கில் இல்லாதவற்றை, பயின்றவை சார்த்தி- வழக்கில் பயின்று வருவனவற்றோடு சேர்த்து, தத்தம் மரபின் சென்றுநிலைமருல்கில் - தத்தமக்குரிய நிலைக்களத்தில், எச்சொல் ஆயினும் - யாதாயினும் ஒரு சொல்லாவது, வேறு பொருள் கிளத்தல் வேறு வேறான

பொருளைத் தரும் என்பதாம்.

உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்திவரும். இசை- செவியால் உணரப்படுவது. குறிப்பு-மனத்தில் குறித்து உணரப்படும் குணம். பண்பு - பொறிகளால் உணரப்படும் குணம். இம் மூன்றும் குறித்து உரிச்சொல் வரும். பெயர்ச்சொல் போன்றும் வினைச் சொல் போன்றும் வருதல், ஒரு சொல பல பொருள் தருதல், பல சொற்கள் ஒரு பொருள் தருதல் ஆகியவை எல்லா உர்ச்சொற்களுக்கும் அமையா. எனவே முன்கூறிய மூன்றுமே உரிச்சொல்லின் சிறப்பிலக்கணம் ஆகும்.

(எ-டு) கறுப்பு - உரிச்சொல்; பெயர்ச்சொல்போல் நின்றது.

தவ - வினைச்சொல் போல நின்றது.

துவைத்தல்- தொழிற்பெயர்; துவை என்னும் உரிச்சொல் பகுதி.

துவைக்கும் - இந்த செய்யும் என்னும் வாய்பாட்டுவினை முற்றுக்குத் துவை பகுதி.

## சூத்திரம் 298

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.

(ப.ரை) வெளிப்படுசொல் - வழக்கில் மிகுதியாக வரும் உரிச்சொற்களை, கிளத்தல் வேண்டா -எடுத்துக் கூற வேண்டியதில்லை, வெளிப்பட வாரா - வழக்கில் பயிற்சி இல்லாத, உரிச்சொல் மேன - உரிச்சொற்களைக் கூறி விளக்கம் செய்தல் வேண்டும். மிகுதியும் வழங்கிவரும்சொற்களை விளக்குவதால் பயன் ஒன்றும் இல்லை என்பதாம். உரிச்சொற்கள் பயின்று வருபவை (மிகுதியாக), அருகி வருபவை என இருவகைப்படும் என்பதும்

அருகிவரும் உரிச்சொற்களையே விளக்கவேண்டும் எனபதும் இச்சூத்திரத்தில் கூறப்பட்டன.

## சூத்திரம் 299

*(உறு, தவ, நனி - உரிச்சொற்கள்)*

அவைதாம்,
உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.

வழக்குப் பயிற்சி மிகுதியும் இல்லாத உரிச்சொற்களாகிய உறு, தவ, நனி என்பன மூன்றும் மிகுதி என்னும் பொருளில் வரும்.

(எ-டு) உறுபொருள் கொடுத்தும் (மிக்கபொருள்)
ஈயாது வீயும் உயிர் தவப் பலவே (மிகப்பலவே)
நனிபேதை - (மிக்க முட்டாள் (அ) பெரிய முட்டாள்)

இவ்வாறு மூன்றும் மிகுதி என்ற பொருளில் வந்தன.

## சூத்திரம் 300

*(உரு, புரை)*

உருவுட் காகும் புரையுயர்பு ஆகும்.

(எ-டு) உருகெழு கடவுள் (அஞ்சத்தக்க தெய்வம்)
புரைய மன்ற புரையோர் கேண்மை - (உயர்ந்தது)

இவ்வாறு உரு என்பது அச்சம் என்னும் பொருளிலும் புரை என்பது உயர்வு என்னும் பொருளிலும் வந்தன.

## சூத்திரம் 301

(குரு, கெழு)

குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே

.(எ-டு) குருமணித் தாலி (நிறம் சிறந்த மணி)

செங்கேழ் மென்கொடி (செந்நிறம்)

இவ்வாறு குரு, கெழு - இரு உரிச்சொற்களும் நிறம் குறித்து நின்றன

## சூத்திரம் 302

*(செல்லல், இன்னல்)*

செல்லல் இன்னல் இன்னா மையே.

(எ-டு) செல்லல் உழந்த - (துன்பம் அடைந்த)
வெயில்புறம் தரூஉம் இன்னல் இயக்கம் (துன்பமான, கொடுமையான இயக்கம்)
இவ்வாறு செல்லல், இன்னல் என்னும் உரிச்சொற்கள் இன்னாமை (கொடுமை, இனியன அல்லாத) என்னும் பொருளில் வந்தன.

## சூத்திரம் 303

*(மல்)*

மல்லல் வளனே

(எ-டு) மல்லல் மால்வரை (வளமான மலை) - வளம் என்னும் பொருள் தந்தது.

## சூத்திரம் 304

*(ஏ - உரிச்சொல்)*

ஏபெற் றாகும்

(எ-டு) ஏகல் அடுக்கம் (பெருகிய, பெரிய மலை) - இவ்வாறு 'ஏ' பெருக்கம் என்னும் பொருள்தந்தது (பெற்று - பெருக்கம்) இச்சொல் வழக்கு ஒழிந்தது

## சூத்திரம் 305

*(உகப்பு, உவப்பு)*

உகப்பே உயர்தல் உவப்பே உவகை

(எ-டு) நாடுகாண மேன்மேல் உகமின் - (உயர்ந்து செல்லுங்கள்) உவக்குநள் ஆயினும் ஊடினள் ஆயினும் - மகிழ்வோர் ஆயினும் ...............)

இவ்வாறு உகப்பு உயர்வு என்னும் பொருளிலும், உவகை மகிழ்ச்சி என்னும் பொருளிலும் வந்தன. உகப்பு என்பதும் மகிழ்ச்சிப் பொருள் தரும் என்பது அறிக.

## சூத்திரம் 306

### *(பயப்பு)*

பயப்பே பயனாம்

(எ-டு) பயவாக்களர் (பயனில்லாத களர்நிலம்)

## சூத்திரம் 307

### *(பசப்பு)*

பசப்பு நிறனாகும்

(எ-டு) முகம் பசப்பூரும்மே - (பசுமை நிறம் அடையும்)

இது பசுமை நிறம் உணர்த்திற்று.

## சூத்திரம் 308

### *(இயைபே)*

இயைபே புணர்ச்சி

(எ-டு) இயைந்து ஒழுகும் (சேர்ந்து)

## சூத்திரம் 309

### *(இசைப்பு)*

இசைப்பு இசையாகும்

(எ-டு) யாழிசையூப் புக்கும் - (இசைப்பொருள்)

- இவ்வாறு இசைப்பு என்பது இசை என்னும் பொருளிலும் வந்தமை காண்க.

## சூத்திரம் 310

(*அலமரல், தெருமரல்*)

அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி

(எ-டு) அலமரல் ஆயம் - (சுழலும் ஆயம்)
தெருமரல் உள்ளம் - (சுழன்று வரும் உள்ளம்)
இவ்வாறு அலமரம், தெருமரல் இரண்டும் சுழற்சிப் பொருள் குறித்தன. (சுழற்சி - சுழலுதல், மயங்குதல்)

## சூத்திரம் 311

(*மழ, குழ*)

மழவும் குழவும் இளமைப்பொருள

(எ-டு) மழ களிறு - (இளம் களிற்றுக்கன்று)
குழக்கன்று - (இளம்கன்று)
இவ்வாறு மழ, குழ - இரண்டும் இளமை சுட்டி நின்றன.

## சூத்திரம் 312

(*சீர்த்தி*)

சீத்த்தி மிகு புகழ்

(எ-டு) வயக்கம்சால் சீர்த்தி - (மிக்கபுகழ்) என்பதாம்

## சூத்திரம் 313

(*மாலை*)

மாலை இயல்பே

(எ-டு) இரவரல் மாலையன் - (இரவில் வரும் தன்மையன், இயல்பினன்) என்பதாம்.

## சூத்திரம் 314

(*கூர்ப்பு கழிவு*)

கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்

(எ-டு) துனிகூர் எவ்வம் (கூர், கூர்தல், கூர்ப்பு - மிக்க, சிறந்த) என்னும் குறிப்பினது..

## சூத்திரம் 315

*(கதழ்வு, துனைவு)*

கதழ்வும் துனைவும் விரைவின் பொருள.

(எ-டு) கதழ்பரி நெடுந்தேர் - (விரைந்து ஓடு குதிரை)
துனைபரி நிவக்கும் - (விரைவாகச் செல்லும் குதிரை)
இவ்வாறு கதழ், துனை இரண்டும் விரைவுக் குறிப்புணர்த்தின

## சூத்திரம் 316

*(அதிர்வு, விதிர்ப்பு)*

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்.

(எ-டு) அதிரவருவதோர் நோய் - (நடுக்கம் தரும் நோய்)
விதிர்ப்புற்றுக் கண்ணிமையார் - (நடுக்குற்று)
- இவ்வாறு இவ் இரண்டு சொற்களும் நடுக்கம் என்னும் பொருள் குறித்தன.

## சூத்திரம் 317

*(வார்தல், போகல், ஒழுகல்)*

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள.

(எ-டு) வார்கூயிற்று ஒழுகை - (நேரான, நீண்டகயிறு)
போகு கொடி மருங்குல் - (இருபொருள்படும்)
ஒழுகு கொடி - (இருபொருள்)
- இவ்வாறு இம்மூன்றும் ஒவ்வொன்றும் நேர், நீண்ட என்ற இருபொருளில் வந்தமை காண்க.

## சூத்திரம் 318

*(தீர்தல், தீர்த்தல்)*

தீர்தலும் தீர்த்தலும் விடல் பொருட்டு ஆகும்.

(எ-டு) துணையில் தீர்ந்த கடுங்கண் யானை - (துணையை விட்டு நீங்கிய)

பேய் தீர்த்தான் - (பேய் விடுவித்தான்)

-இவ்வாறு இரண்டும் விட்டுவிடுதல் என்ற பொருள்பட்டன.

## சூத்திரம் 319

*(கெடவரல், பண்ணை)*

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு

(எ-டு) கெடவரல் ஆயம் - (விளையாட்டு ஆயம்)

பண்ணைத் தோன்றிய - (விளையாட்டில் தோன்றிய)

- இவ்வாறு இவ்விரண்டும் விளையாட்டுக் குறித்தன.

## சூத்திரம் 320

*(தட, கய, நளி)*

தடவும் கயவும் நளியும் பெருமை

(எ-டு) தடக்கை - நீண்ட, பெரிய கை)

கயவெள்ளருவி, நளிமலைநாடன் } இரண்டும் பெரியநீண்டஎன்னும் பொருள் குறித்தன.

## சூத்திரம் 321

அவற்றுள்

தடவென் கிளவி கோட்டமும் செய்யும்

## சூத்திரம் 322

*கயவென் கிளவி மென்மையும் செய்யும்*

## சூத்திரம் 323

நளியென் கிளவி செறிவும் ஆகும்

(எ-டு) தட மருப்பு எருமை - (வளைந்த கொம்பு)

கயந்தலை மென்பிடி - (மெல்லிய மயிர்பொருந்திய)

நளி இருள் - (செறிந்த, அடர்ந்த இருள்)

- இவ்வாறு தட, கய, நளி என்பன முன் சூத்திரத்தில்(320) கூறிய பொருளே அன்றி முறையே வளைந்த, மெல்லிய, செறிந்த என்னும் சிறப்புப் பொருள்களிலும் வந்தவாறு காண்க. கோட்டம் - வளைவு.

## சூத்திரம் 324

*பழுது, சாயல், முழுது*

பழுதுபயம் இன்றே

## சூத்திரம் 325

*சாயல் மென்மை*

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்

நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள.

(எ-டு) வார்கூயிற்று ஒழுகை - (நேரான, நீண்டகயிறு)

போகு கொடி மருங்குல் - (இருபொருள்படும்)

ஒழுகு கொடி - (இருபொருள்)

- இவ்வாறு இம்மூன்றும் ஒவ்வொன்றும் நேர், நீண்ட என்ற இருபொருளில் வந்தமை காண்க.

## சூத்திரம் 325

*சாயல் மென்மை*

## சூத்திரம் 326

*முழுதுஎன் கிளவி எஞ்சாப் பொருட்டே*

(எ-டு) பழுதே வந்தார் - (பயமின்றி வந்தார்)

சாயல் மார்பு - (மென்மையான மார்பு)

மண்முழுது ஆண்ட - (எஞ்சாது நிலம் முழுமையும்)

- இவ்வாறு பழுது, சாயல், முழுது என்னும் உரிச்சொற்கள் முறையே பயமின்மை, மென்மை, எஞ்சாமை ஆகிய பொருள்களை உணர்த்தின.

## சூத்திரம் 327

*(வம்பு, மாதர், நம்பு, மே)*

வம்புநிலை இன்மை

## சூத்திரம் 328

*மாதர் காதல்*

## சூத்திரம் 329

*நம்பும் மேவும் நசையாகும்மே*

எ-டு) வம்புமாரி - (நிலைக்காத மழை)

மாதர்வண்டு - (காதல்வண்டு)

நன்மொழி நம்பி - (அறிவுரையை விரும்பி (அ) நச்சி)

பேரிசை நவிரமேஎ உறையும் - (நயந்து உறையும்)

- இவ்வாறு வம்பு, மாதர், நம்பு, மே ஆகிய உரிச்சொற்கள் முறையே நிலை இன்மை, காதல், நச்சி, நயந்து என்னும் பொருள் குறித்து வந்தமை காண்க.

## சூத்திரம் 330

*(ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாய்)*

ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்

(எ-டு) ஒய்கலை ஒருத்தல் - (நுணுகிய கலைமான்)
கையும் மெய்யும் ஆய்ந்து இருந்தார்-(சுருங்கி இருந்தார்)
நிழத்த யானை - (மெலிந்து நுணுகிய யானை)
கடும்வினல் சாஅய்- (சுருங்கி)
-இவ்வாறு ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாய் என்பன எல்லாம் நுணுக்கம் என்னும் ஒரே பொருள் தந்தமை காண்க.

## சூத்திரம் 331

*(புலம்பு, துவன்று, முரஞ்சல், வெம்மை)*

*புலம்பே தனிமை*

சூத்திரம் 332

*துவன்று நிறைவாகும்*

சூத்திரம் 333

*முரஞ்சல் முதிர்வே*

சூத்திரம் 334

*வெம்மை வேண்டல்*

(எ-டு) புலம்பு விட்டு இருந்தார் (தனிமை நீங்கி இருந்தார்)
ஆரியர் துவன்றிய மூதூர் (ஆரியர் நிறைந்த மூதூர்)
கோடுபல முரஞ்சிய - (கொப்புகள் முதிர்ந்த)
நீ வெம்மையள் - (வேண்டப்படுவாள்)
- இவ்வாறு புலம்பு, துவன்று, முரஞ்சல், வெம்மை ஆகியவை முறையே தனிமை, நிறைவு, முதிர்வு, வேண்டல் ஆகிய பொருள்களில் வந்தன. ஒழுகு கொடி - (இருபொருள்)

சூத்திரம் 335

*(பொற்பு, வறிது, ஏற்றம்)*

பொற்பே பொலிவு

சூத்திரம் 336

*வறிது சிறிதாகும்*

சூத்திரம் 337

*ஏற்றம் நினைவும் துணிவும் ஆக்கம்*

(எ-டு) அணிகலன் பொற்ப - (ஆபரணம் பொலிய, விளங்க)
வறிது நெறி ஒரீஇ - சிறுது (கொஞ்சம்) நெறிதவறி)
ஏற்றத்து இருந்தார் - (நினைத்திருந்தார், துணிந்திருந்தார்)
-இவ்வாறு பொற்பு, வறிது ஏற்றம் ஆகியவை முறையே பொலிய, சிறிது, நினைப்பு, துணிவு என்னும் பொருளில் வந்தன.

## சூத்திரம் 338

*(பிணை, பேண்)*

**பிணையும் பேணும் பெட்பின் பொருள்**

(எ-டு) அரும்பிணை அகற்றி வேட்ட ஞாட்பினும் - (புறந்தருதல் பொருள்)

அமரர்ப்பேணியும் - (அமரரைப் புறந்தந்தும்)

(பெட்டல் - புறந்தருதல்)

-இவ்விரு உரிச்சொற்களும் புறந்தருதல் பொருள் தந்தன.

## சூத்திரம் 339

*(பணை)*

**பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்**

(எ-டு) பணைத்துப்போய் வீழ்ந்தது - (பிழைத்துப்போய் வீழ்நதது)

(வேய்மருள் பணைத்தோள் - (பெருத்த தோள்)

- பணை என்பது பிழைத்தல், பெருத்தல் என்னும் பொருள்களில் வந்தது.

## சூத்திரம் 340

*(படர்)*

**படரே உள்ளல் செலவும் ஆகும்**

(எ-டு) வள்ளியோர்ப் படர்ந்து - (வள்ளல்களை நினைந்து)

ஆறுபடர்ந்தார் - (வழியில் வென்றார்)

-படர் என்பது நினைந்து, சென்று எனப்பொருள் தந்தது.

## சூத்திரம் 341

*(பையுள், சிறுமை)*

**பையுளும் சிறுமையும் நோயின் பொருள**

(எ-டு) பையுள் மாலை - (வருத்தும் மாலை)

சிறுமை உறுப செய்பறியலர்- (நோயுறச்செய்யார்)

-இவ்வாறு பையுள்,சிறுமை இரண்டும் துன்பம் அல்லது நோய் என்னும் பொருள் தந்தன.

## சூத்திரம் 342

(எய்யாமை)

எய்யா மையே அறியா மையே.

(எ-டு) எய்யா மையலை - (அறியா மையல்)
-எய்யா என்னும் உரிச்சொல் அறியாமைப் பொருள் உணர்த்தும்

## சூத்திரம் 343

(நன்று )

நன்று பெரிதாகும்

(எ-டு) நன்றும் அரிது துற்றனையால் பெரும - (பெரிது என்னும் குறிப்புணர்த்திற்று)

## சூத்திரம் 344

(தா)

தாவே வலியும் வருத்தமும் ஆகும்

(எ-டு) கருங்கண் தாக்கலை - (வருந்தியகலைமான்)
தாவினன் பொன் - (வலியினன் பொன்)
-தா என்னும் உரிச்சொல் வருத்தம், வலிமை என்னும் பொருள்களில் வந்தது.

## சூத்திரம் 345

(தெவு, தெவ்வு)

தெவுக் கொளல் பொருட்டே

## சூத்திரம் 346

தெவ்வுப் பகையாகும்

(எ-டு) நீர்த்தெவு நிறைத்தொழுவர் - (நீரைக் கொள்ளும்)
தெவ்வுப்புலம் - (பகைப்புலம்)

## சூத்திரம் 347

(விறப்பு, உறப்பு, வெறுப்பு)

விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே.

விறப்பு, உறப்பு, வெறுப்பு - இம்மூன்றும் செறிவு என்னும் பொருளவாம்.

(தொடரும்)

# சாதிமத வேற்றுமையும் சமுதாய ஒற்றுமையும்

-நாவலர் ச. சோ. பாரதி

'பாரதபூமியிற் பலவேறுபட்ட சமயங்களும் ஜாதிகளும் இருக்கின்றன. அதனால் பாரதசமுதாயம் ஒன்றுபட் டுயர்வாழ்வெய்த முடியாது',-என்று பலர்சொல்லக் கேட்கிறோம். இப்படிச்சொல்லுபவர் நம் நன்மை விரும்பாத பிறநாட்டுப்பேதையர் சிலர் மட்டுமல்லர்; நம்மவருள் ஆங்கிலவுணர்ச்சிமுதிர்ந்த மேதையர் பலரு முளர். இது முதுக்குறைவில்லார் சழக்குரையேயாமென்பதைச் சிறி தாராய்வோம்.

சாதிமதவேற்றுமைகள் நமது நாட்டிலுண்டு. எந்தநாட்டி லில்லை? சமுதாயவொற்றுமையிலும் நாட்டின்மீதன்பிலும் தலைசிறந்தனவாகக் காணப்படு மன்னிய ஐரோப்பியநாடுகளேனு மித்தகைய வேற்றுமைகளை விலக்கிநிற்கின்றனவா? ஏசுமதமன்றி, இதரமதமறியாத ஐரோப்பியர் சமயச்சண்டையற் றமைதியுற்றனரா? கிறிஸ்துசமயம், அரமீனியம கிரேக்கம் உரோமக்கோவில் என்ற பழம்பிரிவுகளோடு மமையாமல், ஆதிரோமமதம் திருத்தப்புத்தேசுமதம் எனப் பிளவுபட்டு, இவ்வொரு சமய விருவகுப்பினருந் தம்முட்கொண்ட மாற்சரியத்துக்கும் மதவெறித் தீச்செயற்கொடுமைகளுக்கும் நாகரிகமற்ற மிலேச்சர்சரிதைகளிலு மீடுகாண லரிதாகும். இக்கிறிஸ்தவர்சமயப் போராட்டங்களை நோக்க, நமதுநாட்டுச் சைவ சமணத் தென்கலை வடகலைச்சண்டையெல்லாம் குற்றமற்றவிளையாட்டாக் கொள்ளவேண்டும், சமயவெறி தலையேறு மதவாதநோய்மலிந்தகாலத்திலும், நமதுநாட்டிற் சிலமடங்க ளெரியுண்டதும் அற்பமான சிறுசச்சரவு சிலவிடங்களில் நிகழ்ந்ததுமுண்டேதவிர, ஒருசாரார் பிறமதத்தரைப் பிடித்துப் பிணித் துயிருடன் தழலிலிட்டு, எரிபவர்பரிபவத்தை அருவிருந்தாகக்கொண்டு குழாங்கூடி விழாக்கொண்டாடின தில்லை. கொள்கை

வேறுகொண்டதைக் கொடுங்குற்றமாக்கி, ஊர்கூடிக் கல்லெறிந்து கொன்றதில்லை. பட்டினிவைத்துக் கோபமூட்டிய கொடுவிலங்குக் கிரையாக்கி மகிழ்ந்ததில்லை. "சில சமயக் கோட்பாடுகளிற் சம்மதம் தரச் சகியாத பழுதற்ற வொழுக்கமுடைய சமுதாயசேவைமேற்கொண் டான்றமூதறிவாற் சான்றோருக் குரிய தண்டனை, அவரைத் தழலிலிட்டுப் பிறர் விழவெடுக்கவேண்டும்" எனச் சட்டங்க ளேற்படுத்தியது மில்லை. இவையெல்லாம், பலவேறுசமயம் புகா ஒருமதமுடைய கிறிஸ்தவ சமுதாயச் சரிதைகளிற்றான் காண்கின்றோம். இக்கொடுமைகளெல்லாம் ஒருநாட்டார் பிறநாட்டாருக்குச் செய்தனவாக் கருதவேண்டாம். ஒருநாட்டில் ஓரரசியலின்கீழ் ஒன்று பட்டகுலாசாரமுடையாரே சமயப்பற்றின்காரணமாகத் தத்தமக்குட் செய்தனவேயாகும். பலபட்டவரசியல்களின்கீழ்ப் பலவேறுசமயங்களும் வேறுபட்ட ஜாதியாசாரவநுஷ்டானங்களும் தொன்றுதொட்டுப் பரவி நின்ற பாரதப் பழநாட்டிலோ நாள்தோறும் அகப்பிரிவுகளும் புறக்கிளைகளும் முளைத்துத் தழைக்க வைதிகமதம் நின்றுநிலவியது. அதுமட்டுமல்ல; பல புறச்சமயங்களும் வந்து புகப்புக, புதியரை விருந்தினராகத் தழுவிச் சற்சாரங்களா லாதரித்தும், ஆதரத்தா வலரைப் பிணித்தும் நாளடைவில் நம்மவராக்கிப் பாரதசமுதாயம் பழியற்றுச் சிறந்து நிற்கின்றது.

இவ்வாறு, ஒருமதமேற்கொண்டிருந்தும் சமயச்சண்டைக் கொடுமைகள் மிகுந்த ஐரோப்பியநாடுகளிற் சமுதாய வொற்றுமையுணர்ச்சி தழையாதிருக்கவுமில்லை; மாதமாற்சரிய வேறுபாடுகள் மிகவுங்குறைந்து அனுதாப ஆதரத்துட னொன்றிப் பல நீண்ட நூற்றாண்டுகளாகப் பல சமயங்களும் ஜாதிகளும் வாழ்ந்துவந்த பழம்பாரதநாட்டில் தற்சமயம் சமுதாயவுணர்ச்சி திட்பங்குறைந்து நெகிழ்வுற்றுமிருக்கிறது. ஆதலால் சமுதாய ஒற்றுமைக்கு, ஜாதி, மத அபிப்பிராய வேறுபாடுகள் தீராத் தடையுமில்லை; சமயமொன்றுடைமை ஜாதிவேறின்மையாதி காரணங்கள்மட்டும் போதியனவுமாகா.

எனவே,நம்மவருள் சமுதாய வொற்றுமையின் தற்கால நெகிழ்வுக்குரிய காரணத்தை யாராய்ந்து களைவதும், ஒற்றுமையுணர்ச்சி தடிக்கத்தக்கவழி கண்டு கையாளுவதுமே நங்கடமையாகும். ஜாதி சமய வேறுபாடுகளே சமுதாய நெகிழ்வுக்குக் காரணமாக்காண்பவர் பாரதசமுதாயத்துக்கு என்றுமே விமோசனங்காணாராவர். வைதிக ஹிந்துமதத்தினுட் சாதிவேறுபாடுகளை இவர் விரும்வுகிறபடி ஒருவாறுகுறைத்து ஒன்றுபடுத்துவதானாலுங்கூடச் சமயவேறுபாடுகளை விலக்குவ தெப்படி? அரபியாவிலும் சீனத்திலும் ஆங்கிலநாட்டிலுமே அந்நியமதஸ்தர் பெருகி அவரவர்க்குரிய ஆலயங்களு மெழவாரம்பிக்கு மிக்காலத்தில், பாரதநாட்டி லனைவரையும் ஒரேசமய மேற்கொள்ளச்செய்ய முயலப்பேகின்றார் யார்? ஒவ்வொரு சமயத்திலுமே நாள்தோறும் பிரிந்துபெருகும் உட்பிரிவுகளைப் பிணைத்தொருமுகப்படுத்தி யொன்றவைப்பார் யாவர்? ஜாதி சமய வேறுபாடுகள் நிற்க; சாதாரண வொழுக்க வழக்க உண வுடைமுறைகளிலும் அபிப்பிராயத்துறைகளிலும் ஒரேவகுப்பினருள்ளும் அனவரதம் பிளவு காணவில்லையா? குலங் குடி வகுப்புக்களில் வேறுபடாதவரும் சோதரருங்கூடத் தம்முள் நாள்தோறும் பலபடியும் வேறுபடவில்லையா? மனிதர் ஒவ்வொருவருமே கால சமய காரண வேறுபாடுகளாற் றம் வழக்க ஒழுக்கங்களையும் கருத்துக்களையும் திருத்திக்கொள்ளாதிருக்க முடியவில்லையே? அப்படியிருக்க, பிரிந்த பெரும் பரதகண்டமுழுதும் ஜாதி சமய வேறுபாடுகளற் றொருதுறைப் பட்டாலன்றிச் சமுதாய ஒற்றுமை யேற்படாதென்பவர்கொள்கை யுண்மையாமா? உண்மையாமேல், உலகத்தி லென்றும் யாண்டு மொருசமுதாய மேற்படவேமுடியாதாகவேண்டும். சமயம், ஜாதி, வகுப்பு, தொழில் , துறை, அறிவு, திரு, ஆற்றலாதி எண்ணிறந்தவிஷயங்களாலும் எல்லையற்ற வேறுபாடுகள் எக்காலத்திலும், எந்தநாட்டிலும், எல்லாமாந்தரிடத்து மெழுவதே யியல்பாயிருப்பதால்,

மனிதசமுதாயமே கிடையாதாகும், ஆனா வித்தகைய வேறுபாடுகளால் நமக்கு நலமும் நம் நாட்டுக்கு விடுதலையு மில்லையேன்று வாதிக்கவருபவரெல்லாம், இவ்வேறு பாடுகள்நிறைந்த மேலையர்நாடுகளிற் சமுதாய வொற்றுமை யுண்மையை மறுக்கத்துணிகின்றிலர். நம்பா லிக்காலம் அவ்வொற்றுமைக்குறைவுண்மையை நாமும் மறுக்கவில்லை. அதன் காரணவிசாரணயிலும், அக்குறைதுடைத்து நம்மவரொற்றுமைநலம் வளர்ப்பதற் கிவர்சொல்லும் வழிகளிலுந்தான் நா மிவரோடு மாறுபடுகின்றோம். இப்படிச்சொல்லுவதால் ஜாதிவேறுபாடுகள் தற்காலம் நமதுநாட்டிற் கவசியமேன்றாவது அவற்றாலாந் தீங்கில்லையென்றாவது வாதிக்கும் சனாதனதர்மவிமர்சனமெழுத நாம் முன்வரவில்லை. ஜாதி சமய வேறுபாடுகளை நம்மவர்சமுதாயவாழ்க்கைக்குத் தீராத்தடையாகக்கொள்பவர்வாதம் ஏதம் தருவதாகும்; இவ்வேறுபாடுகளினிடையே ஒற்றுமையுணர்ச்சி வேரூன்றித் தழைத்தோங்கலாகும்-என்ப தெங்கருத்தாகலா லதை வெளிப்படுத்துவதே இவ்வியாசத்திலெம் முக்கியநோக்கம்.

*நம்முள் ஜாதி மத* வேற்றுமையுள்ளவளவும் சமுதாயவொற்றுமை யேற்படாதென்பார்க் கின்னுஞ் சில சொல்லுவ தவசியம். வேறுபாடுகளனைத்தையும் விலக்கி, யாவரையும் எல்லாவற்றிலும் யாண்டும் எக்காலத்தும் ஒருநிலைப்படுத்தல் ஆவதா? அவசியமா? அறந்தானாமா? நலந்தருமா?--- என்ற சிலவற்றையுஞ் சிந்திக்கவேண்டும். அறவே வேற்றுமையனைத்தும் வேரறுத்தல் அமானுஷ்யம். இஃதாவதன்றாகவே, சமுதாயநலந்தேடு முயற்கியே வீணாகும். நம்மவர் சமுதாயவாழ்வையே வெறுக்கவேண்டுமென்ப தெவரும் விரும்பாததாகையால், சமுதாயநலந்தேடுபவர் ஆகாமுயற்சி மேற்கொள்வதாலாம் பயனில்லை. ஆகவே, சமுதாயநலம்வளர்ப்பதற்கு வேற்றுமைகளையெல்லா மறவே துடைக்க வேண்டுமென்னும் வீண்வாதத்தை மறப்பதே முதற்கடமை. இனி, ஆவதொருகாரியமெனினும், அது கருதிமுயலுங்காரியத்திற்

கவசியமன்றேல், அதைக்கைவிடுவதே முறை. வேறுபாடுகளைவிடாத பிறநாடுகளிற் சமுதாயவொற்றுமை வளரக்காணுவதால், நமது சமுதாயநல்வாழ்வுக்குமட்டும் வேற்றுமையனைத்தையும் முதலில் விலக்கமுயல்வதனா விசியமென்பது விசதமாகிறது. அன்றியும், ஆவதுமில்லை; அவசியமுமல்லாததொன்றை மேற்கொள்வது அறமாகாது. அறமற்ற வெதுவும் நலம் தராது. ஆகையால் ஜாதி மத வேறுபாடுகளனைத்தையும் நம் பாரதசமுதாயத்திலிருந்து விலக்கிவிடமுயல்வது, அமானுஷ்யம், அனாவசியம், அறமற்றது, நலம் தராததுமாகும்.

மேலும், வேற்றுமையற்றவிடம் இயற்கையி லுண்டா? ஒற்றுமைக்கு வேற்றுமை விலக்குண்டா? வேற்றுமைமுழுது மற்ற வொற்றுமையுடைமை, மக்கட்டன்மைக்குமட்டுமேயில்லை; இயற்கைமுறைக்கே பொருந்தாவொன்றாகும். "இறைவன், வேற்றுமைமலிந்த இயற்கைநிலையில் தன் ஒள்றுமையை விளக்குகின்றான்," என்பதே சர்வசமயிகளின் சம்மதவுணர்ச்சி. ஒற்றுமையைப்போலவே வேற்றுமையும் இன்றியமையா இயற்கையறமாகும். ஒற்றுமையின்றி வேற்றுமை நிலைபெறாது. வேற்றுமையின்றி ஒற்றுமையும் நிலைபெற்றதன்று. இதனை நிலையியற்பொருள் இயங்கியற்பொருள் ஆகிய எல்லாவற்றுள்ளுங் காணலாம். பொருள்களெல்லாம் ஒருவாற்றா னொப்புமையும் ஒருவாற்றான் வேற்றுமையும் உடையனவே. இதனை ஒருபுடையொப்புமை என்ப. பிரபஞ்சமேன் பலதிறப்படவேண்டும்? எல்லாம் நீராகவேனும், நிலமாகவேனும் அமையப்படாதா? நிலத்திலும, மலையும் யாறும் மருதமும் பாலையும் கலந்தமைவதேன்? மரமும் செடியும் புல்லும் பூண்டும், நீர்வாழவனவும் தம்மிற் சாதிபேதமற்று வகுப்பொன்றேயுடையவராகக் காணப்படுகின்றில. மக்களினும் மாக்களிடை வகுப்புவேற்றுமைகள் மிகப் பலவாக மலியக் காண்கின்றோம். இவ்வாறியற்கை முழுதும் பரக்கக்காணும் பலதிறவேற்றுமைகளால் ஒற்றுமைநல

மொழிந்த தாயுமில்லை. ஒவ்வொருபொருளுமே வேறுபட்ட அணுத்திரள்கள் அசைத்திறங்களாலான ஒற்றுமைநலத்தை நயம்படக்காட்டிநிற்கின்றது. வாழ்க்கை நிலைக்கே வேற்றுமைகளு மின்றியமையாதனவாகக் காண்கின்றோம். பொருளானுந் தொழிலானும் வேற்றுமையற்றவிடத்தில வாழ்வழியும். ஆனா லொற்றுமையற்ற தனிவேற்றுமைத் தொகுதியிலும் வாழ்வு கிடையாது. வாழ்க்கைச்சிறப்புக்கும் இன்பத்திற்கும் இவ் விருதிறப்பட்ட இயற்கைநிலையு மின்றியமையாததாம். ஆயின் ஒவ்வொருபொருளும் அதனிலைக்குப்பொருந்தியவாறு ஒற்றுமைவேற்றுமைத்திறங்களைக் கலந்தமைந்துநிற்கும். அளவையிலேனும் அமைப்பிலேனும் இத்திறங்களின் பொருந்தாப்புணர்ச்சி அழகையும் வாழ்வுநிலையத்தையுமழித்து நிலைகுலைவிக்கும். இதனாலிவ் விருதிறங்களுந் தம்முட்பொருந்தாநிலைகளில்லை, உண்மையில் யாண்டும் எதனினு மொருநிலைப்பட்டேநிற்குமென் றறிவோம். இவைதம்முள் அளவையுமமைப்பும் பொருந்தப்புணரின், வாழ்வும் வளர்ச்சியும் வனப்பொடுநலனால் வளம்பட வமையும். இவற்றின் தந்திரம்பிறழ்ந்த பொருந்தாப்புணர்ச்சியே அழிவுங் கேடும் விளைநிலமாகும். இவ்வா றெவ்வகைநலத்துக்கும் வேறுபட்ட உறுப்புடைமை வேண்டும்; உறுப்புக்களினொருமைப்பாடும் வேண்டும். சட உயிர்ப்பொருள்க ளொவ்வொன்றின் தனிவாழ்வுக்குமே இவ்வித ஒற்றுமை வேற்றுமைகளின் றியமையாதனவாம்.

திணைமுறையிலும் வேற்றுமைத்தொகுதி மிகுந்து அவற்றிடை ஒற்றுமைத்திற மூடுருவி யொருப்பட்டுநிற்பதே உயர்வுக்குறியாகக் காண்பாம். ஒற்றுமையே வெளிப்படையாய் வேற்றுமை சுருங்கிய பொருளெல்லாம் அஃறிணையும் அதி லறத்தாழ்ந்தனவுமாகி நிற்கும்; திணை யுயரவுயர, வேற்றுமைத்திறமு மிகுந்துகாணும். சடநிலைக்கும் எவ்வுயிர்த் தனிவாழ்வுக்கும் வேற்றுமையுடைமையும் அவற்றிடை ஒருமைப் பாட்டுண்மையு மின்றியமையா

வியற்கையறமாகவே, உயர்திணை மக்கட்டொகுதியாலாய சமுதாயவாழ்க்கையி லவ்வறவரம்பை மீறலாமா? வேறுபட்டவுறுப்புளி னொருப்பாட்டா லுடல் சிறப்பதே போல், பலதிறப்பட்ட மக்கள்கூடி யொன்றிவாழுஞ் சமுதாயமே சிறப்புடையதாகும். வேறுபாடற்ற மக்கட்டொகுதிகள், எல்லாம்வாய், எல்லாம்வயிறென்னஉறுப்புவகையற்ற வோருடற்புழுக்களே போலுயர்வற்ற வாழ்க்கைநிலையுடையனவேயாம். ஆகவே வேறுபாடுண்மையால்மட்டும் சமுதாயவாழ்வுக் கிழுக்கில்லை. ஒன்றுவாழ்திறமுடைய சமுதாயம், அதன்மக்களிடைத் தேன்றும் வேறுபாட்டின்மிகையாற் றளராது, எழிலும் வளமும் எய்துவதாகும். ஒருமைப்படவாழ விருப்படையாத மாந்தர் சமுதாயவாழ்வை மறத்தல் முறை, துறத்தல் கடன்; வேறுபாடுடைமையே வெறுக்கொணா விலக்கொணா இயற்கையறம். வேறுபட்டாரோடொன்றிவாழ்தலே சமுதாயவாழ்க்கையின் முதலறம். வேற்றுமையிலொற்றுமையியல்பு; அதனால் வேறுபாடுடையார் தம்முள் ஒன்றிவாழ்தலெளிதேயாம். வேறுபாடெல்லாம் வெறுக்கொணாது. வெறுப்புடைமையே ஒன்றிவாழத் தடையாகுமன்றி, வேறுபாடுடைமை தடையாகாது. வேறுபாடுடைய பிறரை அதுபற்றி வெறுப்பவரே சமுதாய வாழ்வுக்கு விஷமாவர். வேறுபட்ட ஒவ்வொருவர் தனித்திறவளர்ச்சிக்கு மிடையூறின்றித் தந்நலம்போலப் பிறர்நலத்தையும் பேணி, வெறுப்பின்றி யொன்றிவாழ விரும்புபவரே சமுதாயநலம் வளர்ப்பார்.

இனிக்கூடிவாழ்தலி னவசியத்தளவே அவ்வாழ்க்கையை வளர்க்கு மக்கரை பிறக்கும். இவ்விதியும் சர்வஜீவவாழ்க்கைக்கும் பொதுவானதே. முதலில், பறவை விலங்கினங்களை விசாரிப்போம். உடல் வலியும் மனவுரமுமுடைமையோடு, தன்னல விருப்பமிக்குடைய வகுப்பினவெல்லாந் தனிவாழ்வனவேயாம்; கூடிவாழப் பரபரப்பதில்லை. இவை யெல்லாம், பிறவற்றின்

கேட்டளவிற் றந்நலமுமின்பமுந் தேடுவனவாம். பறவைகளுள், வைரியுங் கழுகு மிக்குணத்தவை; விலங்கினத்தில், புலி சிங்கம் போன்றவையு மித்தகையனவே. பிறவற்றைக் கொன்று தின்னு மியல்புடைமையோடு, பிறிதுதுணை வேண்டா வலியுமுடையவை; அதனாற் கூடிவாழக்கூடாமையும் அவசியமன்மையுமுடையன. வலியும் வன்கண்மையுமற்ற படைக்குருவி ஆடு மானன்னபிறவகுப்பின பலவுங் கூடிவாழ்வனவாம். ஊனுண்பவற்றுள்ளும், பிறவற்றை வருத்துதலி லின்பந்தேடா வியல்பினவெல்லாம் கூடிவாழத்தக்கனவேயாம். கள்ளக்காகமுங் குள்ளநரியுமிவ்வகுப்பின. உரமற்று இரைதேட உதவிவேண்டு மவசியத்தால்மட்டு முடனுறைந்து குரூரவியல்பு. குன்றா ஓநாயன்னவை பசிதணிக்க வலிமெலிந்த தம்மவற்றையே அற்றந்தேடித்தின்னக் கொல்லும்; இரை கிடைத்துழி இனத்தையுமொதுக்கித் தாமுண்ணும்; இனையவற்றின் சமுதாயவாழ்வு தன்னலத்திற்குவேண்டுமளவே யாகும்; உண்மைச் சமுதாயவாழ்வாகாது. சேர்ந்துவாழ்வதில் விருப்பமுடைய காகம், தன்னினத்தைக் கரைந்துண்ணும்; எனில், பிணமுகக்கு மிக்காகமும் தன்னினந் தின்னாது. ஆனால் வளம் படைத்தும், சமுகவாழ்க்கையி லின்புற்றுக் கூடிவாழும் யானைக்கூட்டத்திற்றான் ஒருசிறி துணிமைச்சமுதாய வாழ்க்கைநலங் காணலாகும். இனிய கருப்பங்காடு கண்டபோதும், பிடியும் களிறும் இளையனயும் வலியற்றனவு முண்ணவிட்டுப் பக்கல்நின்று பகைகாத்துக் குழூத்தழுவிப் பெருமிதங்கொள்ளும் அடற்கொம் பாண்யானைக்குணமும், அதற் கடங்கி யுடனடக்கும் யானையினத்தின் ஒற்றுமையும், பகை காணி லிகமொதுக்கிப் பொருதற்குத் தா முந்துறுந் திறல்யானைகளின் பெருங்குணமும், தன்னலங்குறைத்துச்சமுகநலம் பேணுஞ்சமுதாயவாழ்க்கைவளத்தை வளர்ப்பதாகும்.

மாந்தரும், புலி கழுகு போல்வாரும் ஓநாயன்னாரும் நரி காக நேர்வாரும் யானையினமொப்பவரு மாகப்

பலதிறப்படுவாராவர். தன்னய மன்றிப் பிறிதின்பமறியார், துணைவேண்டாவியுடையார், சமுதாய வாழ்விகழ்ந் திக்ந்த கபந்தன் இடும்பன் பகன்போன்ற தறுகண்மை அடலாக்கர் தனிவாழ்வார்.போன்றவையு மித்தகையனவே. பிறவற்றைக்கொன்று தின்னு விரும்புவனவனைத்துந் தாமே தேடியமைக்குந் திறனிலார், சமூகத்தாளாண்மையிற்றன்னலந்தேடுவார், ஓநாய்நீர்மையர் சமுதாயவாழ்விகவாரேனும், அதன் நன்மைக்குழைக்க விழையார். இன்னவர் சமுதாயவாழ்க்கைநல மறியாராவர். தன்னல மறக்கொணாதார், இனத்தவர்கூட்டம் வேட்பார், காகமும் நரியும்போல இனம்பேணிக் கூடிவாழ்வாரேனும், உண்மைக்கூட்டுறவின்ப முணரொணாதார். சுற்றத்தார்நலம் பேணும் விருப்பிற் சிறிது தன்னலக்குறைவு வெறுக்காத சமூக வாழ்வுடையார், யானையினமொப்ப, ஓரினத்தொருதுறை யொழுக்க வழக்கமுடையாரோடன்றிப் பிறருடன் நெருக்க வாழ்வை விரும்பார். இவர் நேசத்திற மினத்தளவேயாமாதாலால். இவர் உண்மைச் சமுதாய வாழ்க்கைநலத்தை யொருதிறத்துணர்ந் ததனைப் பேணுவாரெனினும், நிரம்பவிரியாத நேசநிலையும், தன்னலமறக்குந்தகைக்குறைவு மிவர்சமுதாயத்தைச் சுருக்கிக் கூட்டுறவின்பத்தைக் குறைக்கும். பற்றுக் காரணமற்ற அகன்ற அன்பும் தன்னலந்துறந்தும் பிறரின்பம்பேணும் பெருந்தகவும் விரும்பி வளர்ப்பார்சமுதாயங்களிற்றான் சமூகப் பொது வாழ்க்கையின்பத்தின்பெருக்கும் முதிர்ச்சியும் காணலாகும். விலங்கு புள்ளினங்களின் சமுதாயங்களெல்லாம், தத்த மினத்தளவில் எல்லைப்பட்டுநிற்கும். மக்கட்சமுதாயத்திலேதான், இனத்தெல்லைச் சிற்றளவையிகந்து, சமயப்பொதுமை ஜாதியொருமையாதி குறுகியகாரணப்பற்றைப் பற்றுக்கோடாக்காமல், இன்பதுன்பங்களைச் சமூகப் பொதுப்பொருளாக்கிச் சமுதாயத்தொவ்வொருவருடையவு மனைவருடையவு மாக்கம்பெருக்கு முண்மையுயர் வாழ்வு சாத்தியமாகும். சிறி தாழச்சிந்திப்பார்க்கு, " மக்களனைவருமோரினத்

தொருபெருவகுப்பினரேயாவர்; பறவை மிருகங்களிடைக்காணும் பிளவுபட்ட வேறு பல் பெருவகுப்புக்கள் (**genera**) மாந்தரிடைக் கிடையா; மனிதவருக்கமுழுது மொரு பெருவகுப்பாகுமன்றி, உருவ வினை யுண வொழுக்கங்களில் ஒன்றொணா வேற்றுமைகளாற்வகுப்பு வகை மாந்தரிடைக்கிடையாது," என்பது விசதமாகும். இணங்கொணா யியற்கைவேறுபாடுகளாற் பிரிவுபட புள் விலங்கினப் பெருவகுப்புக்களின் முக்கிய அடையாளம், இருவகுப்பினிருபாலிரண்டின் கூட்டுறவுமுயக்கம் பயன்தராது; அதனாலவற்றிடை இயற் பாலீர்ப்புமில்லை--(**no natuual sexual attraction**) மக்கட்பெரும்பகுதியிலிவ்வித இயற்கைப்பிளவில்லை. எவ்விருபாலருக்கும் மணமு மகப்பேறுமியல்பாகும். இதனாலு மனிதசமுதாயத்துக்கு இனவரையறையின்மை தெளியலாகும்.

கூட்டுறவை இயற்கைநெறிநலமாக் காதலியாமற் காரணக் கட்டுப்பாட்டளவில்மட்டுங் கூடிவாழ்வார், அவிழ்ந்தபொழுதகன்றோடும் நெல்லிக்காய்மூட்டை, களங்கடந்து தளத்தலைவன்கட்டளையுங் கழிந்தபொழுது பிரிந்தொழியும் படைகள்போலக் கட்டளவிலேகூடிக் கட்டாயமில்லாதபோது விலகுபவர் கூட்டமேயாகும்; உண்மைச்சமுதாயமாகாது. சமுதாயங் கேவல மொரு வெறுங்கூட்டமில்லை; தனிவாழ்வுடையதொரு ஜீவியநிலையாம். ஜீவியநி0லையுடைய ஒவ்வொன்றிற்குந் தனித்தொழிலுடைய பல வுறுப்புண்டு; ஆனால் உறுப்புக் கூட்டத்தைமட்டும் ஜந்து மனிவாழ்வுபெற்றுநிற்பதே ஜந்துவாகும். அதன் வாழ்க்கைதான் ஜீவியநிலையாம். உறுப்புகளின் தனிவினைமை ஜீவ்யமாகாது; அதை வாழ்க்கையென்னும் வழக்குமில்லை. தனி உறுப்புக்களின் வினைமையின் வேறாய்ப் பலஉறுப்புக்களி னொன்றிய வினைத்திரட்சியின் முடிவாய், அவற்றினொருப்பாட்டி னுருப்பாடாவதே அவ்வுறுப்புக்களாலாய ஜந்துவின் ஜீவ்யவாழ்வாம். அதுவேபோல், சமுதாயவுணர்ச்சியற்ற

மாந்தர்கூட்டமெல்லாம் தனிவாழ்வுபெற் றுயிர்த்திலா வெறுங்கூட்டமேயாகும். உண்மைச்சமுதாயமாவது, அத னவயவமக்களின் தனிவாழ்வின் வேறாய், அவர்களி னொற்றுமையுணர்வின் முடிவாய் ஒருப்பட்ட தனிவாழ்வுடைய தொன்றாம். நிலைபெற்றவுண்மைச் சமுதாயத்தைத் தனக் கொரு தனி ஜீவ்யநிலையுடைய ஜந்துவுக்கு ஒப்பிடலாம். அவயவ்வினைகளின் வேறான தனிவாழ்வுடைய அவயவிபோலவே, தன் னகவுறுப்பா மாந்தரின் தனிவாழ்க்கைக்கு வேறாய்த் தனக்கொரு தனிவாழ்வுடையதே சமுதாயமாம். அவயவியின்வாழ்வு எப்படி அவயவங்களி னியல்புக்கும் தொழிலுக்கும் வேறாயினுமாறிபாடின்றிப் பொருந்திநிற்குமோ, அப்படியே சமுதாயவாழ்க்கையும் அதிலுள்ள மக்களின் தனிவாழ்வுக்கு வேறாகி விரோதமற்றிருக்கும். யாதொரு அவயவி தன்னவயவங்களின் தனிவாழ்வைக் கெடுப்பானோ, அவன் கெடும் அவய்வத்தளவு தன்வாழ்க்கையையும் கெடுப்பானாவான். அவயவமனைத்தும் தத்தந்தொழிலைத் தடையின்றி நடத்தி வளரச்செய்யுமவயவியே தன் பூர்ணவாழ்க்கையின் சம்பூரணசுகம் பெறுவானன்றோ. உறுப்புச் சில கெடினும், உறுப்புக்களின் வினைமை சிறிது குன்றினும், ஜந்துவின் ஜீவியம் சம்பூர்ணமாகாது. உறுப்புக்கள் வேறுபட்ட இய்பும் வினையுமுடையவைகளாகவே, யாரேருப் புனியல்புவினைமையில் தன்னிலை திரினின் அவயவியின்வாழ்வு மவ்வளவி லூறுபடும். பல திறப்பட்ட அவயவங்களின் வெவ்வேறாய வினை திரண்டே அவயவியின் வாழ்க்கைக் குயிருமழகும் தருவதாகும். சமுதாயவாழ்க்கையு மவ்வகைத்தே. ஒரு சமுதமாயமக்களின் தனிவாழ்வு சிறக்கச் சமுதாயவாழ்வுஞ்சிறப்பதாகும். மக்களின் தனிவாழ்க்கையை ஊறுபடுத்திச் சமுதாயம் நன்மைபெறாது. தன் னவயவமக்க ளெல்லாரு மொருவகைப்பட்டு வேறுபாடெதுவுமின்றியிருக்க விரும்பும் எந்தச் சமுதாயமும், தன் உறுப்புக்களெல்லாம் ஒரு தன்மைத்தாக்கவிரும்புமவயவியைப்போல் நலிந்துகெடும்.

அவயவியின் வாழ்க்கைக்கு, அல்லவுறுப்பு மவசியம். சிறந்ததாகக் கருதுங்கண்ணொன்றேகொண்ட ஜந்துவின்வாழ்க்கை யென்னாம்? காதும் மூக்கும் வேண்டாமா? கீழ்நின்று நடத்துங் காலில்லாத வாழ்வு முடவாழ்வன்றோ? உறுப்புக்களிற் கீழ்மேல் கிடையாது. அவயவியின் வாழ்க்கைக்கு அனைத்துறுப்பு மவசியமே. அவன் பாதுகாப்புக்கும்கவனத்துக்குமனைத்துஞ்சரியுரிமை யுடையனவேயாம். சமுதாய நல்வாழ்வுக்கும், பலவேறுபட்ட நிலையுந் தொழிலும் நினைவுந் திறனுமுடையார் எல்லாரு மவசியமே; அவ்வனைவரையு மொப்பக்காத்துப் பேணுவதும் சமுதாயத்தின் கடமையாம். தொழில்மறந் திடந்தவிரும் நாவைத் தன்றோழினடத்துழி யூறுசெய்யும் பல்லும் ஊறுபடும் நாவும் தத்தம் தொழிலை முறையாற்றி யொருவாயி லமைந்து மாறின்றி அவயவியின் வாழ்க்கையை வளர்ப்பதேபோல் தத்தம் அறந்திறம்பா தவ்வவர் தொழிலாற்றிப் பிறழ்ந்தார் பீழைபடினும் அவர்க் கூறுசெய்வது கருத்தின்றி அனைவரு மறமாற்றி யொருப்புட வாழும் மக்களையுடைய சமுதாயம் நாள்தோறும் நலமுற்று வளரும். தங் கடனாற்றுவதி லிடை வந்த பிறர் நோவநேருவதல்லால், சமுதாயவாழ்வு பேணுவாரனைவரும் தாம் பிறாநோவ நடவாம லறமற்ற விரும்பல்வேண்டும். உய்த்துணரின் ஒவ்வொருவ ருண்மைநலமும் பிறர்நலம் பேணுவதேயாம்.

இனித் தமிழச்சமுதாயந் தற்காலம் நிலைகுலைய நிற்பதற்கு முக்கிய காரணம் ஜாதிமாற்சரியமேயாம். இத்தகை வேறுபாடுக ளென்று மிருந்திருக்க, முன்னில்லாத மாற்சரியவுணர்ச்சி தற்காலந் தடிக்கக் காரண மறியவேண்டும். தமிழகத்தே முன்னையவேறுபாடுகள், சமுதாயப் பொதுவாழ்வுக்கு மாறின்றி அவசியம்பற்றியும் வினைவகை இயல்புகள் காரணமாயு மெழுந்தனவாய்ப் பல்வகுப்பினரும் கீழ்மை மேன்மையுணர்ச்சியின்றித் தத்தந்தொழி னிகழ்த்தி யொன்றிவாழ்தற் கிசையவமைந்து நின்றன. சமுதாயவொற்றுமையும் இன்றியமையா வியற்கைச் சிறுவேற்றுமைகளுந் தம்முள் மாறின்றி யியைந்த

விணக்கத்தால் தமிழச் சமுதாயவாழ்வு சிறந்து நின்றது. ஆரியவர்ணபேதங்களிற் பேதவுணர்ச்சியுண்டோ, அன்றி யிடைப்புகுந்தோ, அறிகிலேம். தமிழகத்திற்பகைமைவித்தாய பேதவுணர்ச்சி கிடையாதென்ப தொருதலை. நிலம் திணை தொழில்கள்பற்றி வேறுபட்ட தமிழர்பலரும், கீழ்மேலுணர்ச்சியற்றுத் தகவும் தருணமு நேருங்கால் தம்முள் வரைவின்றி உணவும் மணமும் கையாண்டுள்ளார். ஆரியநாகரிகத்தோடு கலந்தபிறகும் ஆரியர் வருணமுறையனைத்துந் தமிழ்நாட்டில் வேரூன்றினதாயுமில்லை. என்றும் போலத் தொழில்பற்றிநின்ற வகுப்புகளையே பலஜாதிகளாகப் பேசுவதல்லால், வரன்முறையே மேலவர் இடையாவார் தாழ்ந்தாவர் என்ற பிறப்புவகை வேறுபாடு கண்டதில்லை. "மேலவர் தாழ்ந்தாரிடைப்பெண்கொள்வதன்றித் தருவதில்லை" கீழவர் மேலவரிட முண்பதன்றி உண்பிப்ப தில்லை. என்றமுறைகள் ஆரியருட்போலத் தமிழருட்டமிழகத் தில்லை. சரிதமறியும் இடைக்காலந்தொட்டுத் தமிழ்நாட்டில் தச்சர் கொல்லர் மறவர் இடையர் வேளாளர் என்ற வினைவகை வகுப்புக்களுண்டேனும், உணவு மணவுரிமைகள் ஒருவருக்கு அதிகமும் மற்றவருக்குக் குறைவுமாக வேற்பட்டதில்லை. ஒவ்வொருவகுப்பினரும் தம்மைத் தாம் மதித்துப் பிறர் தமக்குத் தரா வுரிமைகளைத் தாமும் பிறருக்கு மறுத்துத் தம்மதுபோலப் பிறருரிமைகளையும் பேணிச் சமத்துவபுத்தியோடு தம்மறமாற்றிச் சமுதாயநலம் வளர்த்துவந்தார். இன்றளவும் தமிழகத்தி லிவ்வாறே ஒவ்வொருவகுப்பினரும், தம்மைத் தாம் மதித்துத் தம்முட்டாமே மணந்து, பிறர்பால் உணவொடுமணமும் மறுத்தேவருகின்றனர். தமிழப்பார்ப்பனரும் தமிழக நாகரிக முறையையே கையாண்டு தம்மை வேறாக்கிவைத்தும், பிறர்பால் உணவொடுமணமும் மறுத்தேவருகின்றனர். தமிழப்பார்ப்னரும் தமிழக நாகரிக முறையையே கையாண்டு தம்மை வேறாக்கிவைத்தும், பிறரிடைத் தாந்தராவுரிமைகளை விரும்பாமலும் பிறர் தம்மிற்றாழ்ந்தவரென்ற பேதவுணர்ச்சி பிறவாமலும் பிற தமிழரோ டொன்றிவாழ்ந்தமைவாரானார். அதனாற் சமுதாயநலம் குறையாமல்

வளர்ந்துவந்தது. தற்காலமோ இச்சமத்துவ நல்லுணர்வுதளர்ந்து, சிலர் தம்மை மேலோராகத் தாங்கருதுவதோடமையாது பிறரையுந் தம்மேன்மைபாராட்ட விரும்புவாராயினர். இப்பிறழ்வுணர்ச்சியே சமுதாயவாழ்வுக்கு நஞ்சாயிற்று. இந்நச்சுணர்வு பிறக்கவுந்தடிக்கவும் முதற்காரணமாவார் யார் என்ற வினா அவசியமற்றது. யார்தவறேனும், தவறாலாய கேடு துடைக்கமுயல்வது சமுதாயவாழ்வை விரும்பு மனைவருக்கு மொத்தகடனேயாமாதலால், வீண்வழக்கிட்டுப் பகைவளர்த்துச் சமுதாயவாழ்வை யிழவாமல் உண்மைப் பரபரப்புடன் இம்மாற்சரியப் பொய்யுணர்ச்சியைக் கொன்று ஒற்றுமைவளர்க்கும் "வேற்றுமையில் சமத்துவ" புத்தியை வேரூன்றச்செய்து தமிழச்சமுதாயத்தை நிலைநிறுத்த விரைவோமாக.

சமுதாயவாழ்வுக்குச் சமுதாயவுணர்ச்சி தடிக்கவேண்டும்; சமுதாய நன்மைக்கு மாறான தன்னலமுன்டென்பதை ஒவ்வொருவரும் மறத்தல் வேண்டும். உரிமையெல்லாந் தமக்குங் கடமையெல்லாம் பிறர்க்குமாகக் கருதுபவரே சமுதாயப் பகைஞராவர். தமக்கேபோற் பிறர்க்கு முரிமையுண்டு; பிறர்க்குப்போலத் தமக்குங் கடமையுண்டு. உரிமையுங்கடமையுந் தம்முட்டொடர்புடையன; தனித்து நில்லா. தன்னுரிமை பிறர்கடமையாவதேபோல், பிறருரிமை தன்கடமையாமென்பதை மறக்கொணாது. உரிமையே பேசினும், கடமையே கருதினும், அகத்தும் புறத்து மொப்பறிவுறுத்தித் தொழிலாற்றுவார் தப்பாத சமுதாயசேவை புரிவார். சமுதாயம் நிற்க; இந் நடுநிலைநினைவும் பிறர்பொருட்டுத் தன்னுரிமைதவிர்க்குந்திறமு மற்றவழிக் குடும்பவாழ்வே கூடாதாகும். தத்த முரிமை சில குறைத்துங் கடமை சில பெருக்கியும் வருவார்க்குத்தான், குடும்பமும் இனமுங் கூடுவதாகும். அன்றி அனவரதம் தம் முரிமைகளி லிறையுங் கறையஇடந்தராதுபேணுவார்க்கு அடவிகளிலரக்கர்தனிவாழ்வே பொருத்தமாகும். தன்னலமு மின்பமுமன்றிப் பிறிதுணராப் புலியும், காமத்துணையுடன் தன்னிரையைப்பகுத்துண்கிறது. இதுமட்டோ?

தாய்ப்புலி புழைகாக்கத் தந்தைப்புலி தன்குறளைகள் வலிபெற்று வேறாகிவாழுமட்டும் அவைகளுக்கும் இரைதேடிக்கொடுத்தும் பகைகாத்துப் பேணியும்வருகின்றது. இவ்வாறு கொடும்புலி கூடத் தன்னலங்குறைத்தே தங்குலம்பெருக்குவதைப் பார்க்கின்றோம். தம்முரிமை சிறிதும்விடோமென்பார்க்கு எவ்விதக் கூட்டுறவுமே சாத்தியமில்லை. தன்னலத்துறவிலேதான் கூட்டுற வினபவீடு திறக்கின்றது. உலகத்தில் மனித ரியல்பானு மவசியத்தானும் சமூகவாழ்வையே விரும்பவேண்டியவராதலால் அதற் கின்றியமையாத இத்தன்னலமற்றப்பையு மேற்கொள்ளாதிருக்க முடியாதவராகின்றார். இவ்வறமேற்கொண்டால், சமுதாயவாழ்வு சிததியாய்விட்டதாகும். எனவே சமுதாயம் நேகிழ்வுற்று நலங்குன்றுவதற்குமுக்கிகாரணமிவ் வறவுணர்ச்சிக்குறைவேயாகும்.; ஜாதி மத வேற்றுமைகள் உண்மைக்காரணமாகா. சமுதாயவுணர்ச்சியும் தன்னலமறக்குந்திறனுந் தழையுமாயின், சமுதாயந் தலைநிமிர்ந்து வளம்பல வளர்வதாகும்

நம் பார்தசமுதாயங்களும், அறிவெட்டுந் தொல்லைக்கால முதற் பல்வேறுபட்ட மக்களாலாய்ப் பகைமையும் பழியு மின்றித் தகைமையிற் றழைத்துள்ளனவாகக் காண்கிறோம். வசிஷ்ட விசுவாமித்திரவாதத்தாலும், பிராம்மண பௌத்தப் பிணககாலும், ஹிந்து முஸ்லீம் நெருக்காலும், சைவ சமணச் சண்டைகளாலும், தென்கலை வடகலை வெற்யாட்டாலும், ஹிந்துஸ்தானத்திலேனும் தமிழகத்திலேனும் சமுதாயவாழ்வு நிலைகுலைந்ததில்லை. மகம்மதியரும் மகாராஷ்டிரரு மாறுபட்டு மலைந்தபோதும், பாரதபூமியிற் சமுதாயவாழ்வு கெட்டதில்லை. கங்கை வளநாடு விட்டு நெட்டிடைக் கொடுவனநீந்தி வந்துற்ற ஆரிய அந்தணரையன்போடாதரித்து அவரறம் பேணிவாழமாறுததவிய தமிழகம், நாளடைவில் அவ்வந்தணரைத் தம்மொழி மறந்து தமிழ்வளர்க்கச்செய்து, வேறின்றித் தன்னகப்படுத்திச் சமுதாய வாழ்கையின பந்தை விரித்துப் பெருக்கி வளம்பட வளர்த்து நலம் பெற்றது. பின்வந்தத பௌத்த சாக்கியரையுமப்படியே தன்

சமுதாயவாழ்வி வாழ்த்தி யமைத் தழகுபெற்றதோடு, தமிழரும் கிறிஸ்தவர் யூதர் மகம்மதியாரதி அயனாட்டாரையு மசட்டை செய்யாம லாதரித்திழுத்துத் தழுவித் தழைத்து நின்றது. தொன்றிப்படி நின்றுநிலவிய சமுதாயப் பெருவாழ்வு தற்காலம் தளர்வுற் றவலப் படக் காரணம் சமுதாயவுணர்ச்சிக்குறையுத் தன்னலவிருப்ப மிகையுமன்றி வேறின்று. சாதிசமயவேறுபாடு நாட்டுக்கும் நமக்கும் புதிதில்லை தற்காலத் தடுமாற்றந் தவிர்த்துச் சமுதாயவாழ்வை நிலை நிறுத்தி முன்னிலுஞ் சிறக்கச் செய்வதற்குரியவழி தேடவும் நடக்கவுமரிதுமில்லை. உயிரனைத்துமொப்ப வோம்பு மருட்.பெருமான் கௌதமரும், தனக்கு நிரயநிலையை விலையாக்கியேனும் சமுகத்தாருக்கு முத்தி தேடுமாசைமேலிட்டால் ஆசாரியன் ஆணைமீறி மூலமந்திரத்தை அனைவருமறிய முழக்கஞ்செய்த அருட்டுறவி இராமாநுஜரும் பிறந்த நாட்டவராய நாம், சமுதாய வாழ்க்கை வளர்ப்பதற் குரியுவழி கடைப்பிடிக்கப் பின்னிடைவேமோ?

நமக்கு நாம் விருமபுமளவிற் பிறருந் தமக்கு நலம்விரும்புமியல்பை மறவேமேல், சமுதாயவாழ்க்கைநலம் நம்பால் வழிதேடி வந்தடையும். தாம்பெறவிழைவதேபோற் பிறர்மாட்டுஞ்செயத்துணிவதே தருமமாகும். அன்பு நிறையு மறத்துறையு மதுவேயாம். சமயத்திலோ மற்றைச் சதகோடி யுரிமைத்துறைகளிலோ பிறர் நம்வழியிற் றலையிடவே வேண்டேமாகையால், பிறர்பேணுமுரிமைவழிகளில் நாமு மெவ்வகையினுந் தலையிடல் தவிர்த்தல்வேண்டும். தமக்குரிய கோழியாடுகளைக் கொல்லுமுரிமைவிடாத ஹிந்துக்கள், முறைகடவாது தமக்குரியபசுவைத் தம்மிஷ்டப்படி செய்யுமுரிமையை முஸ்லீம்சோதாருக்குமறுப்பு தெங்ஙனமாகும்? உயிர்க்கொலையை அறவேறுக்கு முயர்ஞான சமயத்தாரும், பலிவிரும்புந்தெய்வவழிபாடுடையார் கொலைப்பலியைத் தடுப்பதில்லை. பலிப்பொருளை நெறியிற் றமதாக்கிப் பின் கொல்லுவதை வலியாற் றடுப்பது தவறென்ப கறியும் நம்மவர்,

பிறருடைமையில்லாத் தம் பசுவைத் தஞ்சமய்விதிகடவாத மகம்மதியர் வழிபாட்டுமுறையிற் கொல்லுமுரிமையை வலிந்து தடுக்க முயல்வது அறமாமா? பசுப்பேணல் நம்மதமாயின், பசுப்பலி அவர் சமய அறமாவதை மறுப்பதும் மறத்தலும் முறையாமா? சமயக்கடனளவிற் பசுப்பலியை நிறுத்தவும், நம்மவர் சமுதமாயவுணர்ச்சிக்குறைவுந் தன்னலவிருப்ப சமயவுணர்ச்சியைமதித்துப் பசுக்கொலையைக் கூடியவரை குறைக்கவும் மறைக்கவும் நம் பாரத சமுதாய சோதரரான மகம்மதியரை நாம் நேச முறையில் மன்றாடிக்கேட்குமுரிமை நமக்குண்டு. மாற்சரியமின்றி அன்புவழியி லவர்பாற் குறையிரப்பின், அவரும் நம் வேண்டுகோளை மதித்திணங்கும் நேசக்கடமையை மறவார். அதைவிட்டு அவருரிமையை நாம் வலிந்து மறுப்பின், நாந் தவறிழைப்பதோடு வலிகொண் டவர் மோதிப் பகைக்கவு மவர்க்கு நாமே வழிகாட்டுவதுமாகும்.

இனி நம் மகம்மதிய கிறிஸ்தவ சோதரர்கள் தத்த மாலயங்களில் தொழுகை ஆராதனைகள் நடக்கும்போது, கோவிலின்முன் எவ்விதஒலியுமெழாதபடி காப்பது தங்கள் சமயக்கடனாகக் கருதுகின்றனர். தெருக்களிற் பிறர்க் கிடையூறின்றி ஊர்கோலம் உலாக்கள் நடத்தவும் பஜனை இசைமுழக்க மியற்றவும் ஹிந்துசமயத்தவருக் குரிமையுண்டு. ஆனால் நமது கிறிஸ்தவ மகம்மதிய நண்பர்க ளிவவுரிமை நாங்கொண்டாடுவதை வெறுப்பதோடு, தொழும்பொழுதுமட்டுமல்ல எப்போதுமே தங்கள் கோவில்முன் எவ்விதஜனை இசைமுழக்கமும் யாரு மெதுபற்றியுஞ்செய்யவிடேமெனத் தடுக்கவிரும்புகின்றனர். வலிந்துதடுப்பது அவர் பால் தவறேயாம். ஆனா லவர்சமயவுணர்ச்சியுணர்ச்சியைமதியாமல் அவர் தொழுகை மத்தியிலும் நா மொலியெழுப்பி உரிமை நமக்குளதேனும், நேசத்தோடு அவர் சமயவுணர்ச்சியை நன்குமதித்துத் தொழுகைக் காலங்களிலேனும் நா மிசையை அவராலயங்களினருகில் நிறுத்தின் நம்நட்பைவிரும்பித் தம்முரிமைகளிற் சிலவற்றை நமக்காக அவர்

விட்டுக்கொடுப்பார். சிறிதுதூரம் சிறிதுநரே மிசைநிறுத்துவதி லெவ்விதக்கஷ்ட நஷ்டமும் நமக் கேற்படுவதில்லை. சமயநெறி யவசியமற்றவிடத்திலும் ஹிந்துக்களினிசையுரிமையை மறுக்க மகம்மதியர்விரும்புவது மவசியமற்ற தவறாகும். இருதிறத்தவரு மொருநாட்டி லொன்றிவாழுமுரிமையுங் கடமையு முடையராயிருக்கப் பரஸ்பரம்சமயக்கொள்கைகளையு முணர்ச்சிகளையும் மதித்துப்பேணி அவசியமற்ற வீணுரிமைகளைப் பாராட்டாமல் விடுத்து நட்பொடு நலத்தையும் வளர்க்கவிரும்பாது பகைனைவிதைதேடிவிதைப்பது அறிவுடைமைக்கழகாமா? இருவரும் தத்த முண்மை நலமுணர்ந்து ஒன்றிவாழ்வதே முறையாமன்றோ? பரஸ்பரஞ் சிறுவேறுபாடுகளைப் புறக்கணித்து மதக்கடமைகளை மதித்து நேசித்தொழுகநினைப்பதே அறத்துறையும் நெறிமுறையும் நிறைநலனுமாம்.

*************

# இரு யோகம்

*பேரறிஞர்* ம.ரா.போ. குருசாமி

*(முன் இதழ்த் தொடர்ச்சி)*

## ஒரு குறள்

தவப் பயன், தவ மாண்பு இவற்றின் கேட்டுக்குக் காரணமாகும் குற்றம் குறைகளை ஆய்ந்து வரும் நம் முயற்சிக்கு உதவும் ஒரு குறளினை எண்ணிப் பார்ப்பது நலம்.

*"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்"[41]*

மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தின் இறுதிக் குறள் இது. நோய் கெட வேண்டுமாயின் - அடியோடு கெடவேண்டுமாயின் காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும் அடியோடு அழிய வேண்டும். இப்படிப் பொருள் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. 'நோய்' என்ற சொல் எந்த நோயைக் குறித்து வருகின்ற உருவகம் என்பது தெளிவாக வேண்டும். வினையாகிய நோய் என்றும் தெளிவாக வேண்டும். வினையாகிய நோய் என்னும் பிறவியாகிய நோய் என்றும் உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். பிறவிப் பிணிக்கு வினையே காரணம். ஆதலின், இரண்டையும் இணைத்து, வினை விளைவாகிய பிறவி நோய் தீரவேண்டு மாயின் காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும் சுவடுதெரியாமல் அழிய வேண்டும் எனத் தெளிவு காணலாம்.

தவாப் பிறப்பு ஈனும் வித்து என்று அவாவினைச் சொல்வார் திருவள்ளுவர்[42] அவா, ஆசை, வேட்கை, பற்று முதலியன ஒருபொருட் சொற்கள் தாமா என்பதில் ஐயம் எழுப்பி, அவற்றிடை

* 41 - திருக்குறள் 360, 42 - திருக்குறள் 361

நுண்ணிய வேறுபாடு உண்டென விளக்கியோரும் உளர். பொதுவாக இவற்றை ஒரு தரமுடையனவாகக் கொள்வதில் தடை இல்லை.

'காமம் வெகுளி மயக்கம்' என்னும் குறளில் 'காமம்' என்ற சொல்லுக்கு மணக்குடவர், பரிமேலழகர் தொடங்கி மு.வ. வரையில் 'ஆசை' என்ற பொதுப் பொருளையே தந்துள்ளனர். மெய்யுணர்தல் என்ற அதிகாரத் தொடர்ச்சியாக அவா அறுத்தல் வருகின்றது; அதனை நோக்கிப் போலும் 'காமம்' என்ற சொல்லுக்குப் பொது நிலையில் ஆசை எனப் பொருள் கூறினர். மேலும், பிறப்புக்குக் காரணமாக எல்லா வகைப்பட்ட ஆசை காரணம் ஆகின்றது. ஆகையால், மெய்யுணர்தலுக்குத் தடையாகக் குறிக்கப்டும் காமத்தைப் பொதுநிலையில் ஆசை என்று கொள்வதை ஒருவாறு ஏற்றுக் கொள்வதில் பெருங்குறை நேராது.

ஆனால், இன்றைய வழக்கில் மட்டுமின்றி, இலக்கிய ஆட்சியிலும் 'காமம்' என்பது ஆண்-பெண் தொடர்புக்குக் காரணமான ஆசையைப் பெரிதும் குறிப்பதை நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

திருக்குறளிலே 'காமம்' என்ற சொல் பொதுநிலையில் எழும் ஆசையையும், ஆண்-பெண் ஆசையையும் குறித்து வருவது தெளிவு[43] இரண்டு பொருளில் பின்னதே மிகுதியாகக் குறளில் வருகின்றது.

கம்ப ராமாயணத்திலும் காமம் என்ற சொல் மேற்குறித்த இரண்டு பொருளிலும் கையாளப்படுகின்றது. ஆண்-பெண் ஆசை என்ற பொருளிலேயே 'காமம்' என்ற சொல் மிகுதியாகக் கம்ப

---

* 43 – எ-டு : பொதுப்பொருளில் குறள் 399; சிறப்பாக ஆண்-பெண் ஆசை குறித்துக் குறள் 1090

* 44 – திரு. அ.சே. சுந்தரராஜனின் ஸ்ரீமத் கம்ப ராமாயண அகராதி இரண்டாம் பாகம், பக். 125-126 காண்க.

ராமாயணத்திலும் ஆளப்பட்டுள்ளது[44].

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய் என்ற குறளில் உள்ள 'காமம்' சொல் கம்பரால் ஆண்-பெண் பாலுறவு ஆசை என்ற பொருளில்தான் கையாளப்டுகிறது. கம்ப ராமாயணப் பாடல்களை நோக்குமிடத்து இவ்வுண்மை தெளிவாகும்.

முடி சூட்டுவது பற்றிய முடிவு செய்யப்பட்டபோது இராமனுக்கு வசிட்டமுனிவர் உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கிறார். இப்பகுதியைப் பாடும் கம்பரின் நினைவரங்கிலே திருக்குறள் பேராதிக்கம் செலுத்தியுள்ளது என்பது தெளிவாகப் புலப்படுகிறது[45] கம்பர் பாடிய பாடல்களுள் ஒன்று (1427) வருமாறு :

*தூம கேது புவிக்கெனத் தோன்றிய*
*வாம மேகலை மங்கைய ரால்வரும்*
*காமம் இல்லை யெனிற்கடுங் கேடனும்*
*நாமம் இல்லை நரகமும் இல்லையே*

திருக்குறளின் எதுகையமைப்பிலேயே காமம், நாமம் என்ற சொல்லாட்சி அமைந்திருப்பது நோக்கற் பாலது. காமம் என்பதன் விளக்கமாக முதல் இரு வரிகளும் வந்துள்ளன. 'மங்கையரால் வரும் காமம்' என்பது தெளிவாக - ஐயத்திற்கு இடமின்றி அமைந்துள்ளது.

இராமாவதாரத் தனித்தன்மை

இராமாவதாரத்திற்கு ஒரு தனித்தன்மை உண்டு. பெண்ணாசை யறியாத கலைக்கோட்டு முனிவன் செய்த மகப்பேறு வேள்வியின் விளைவு இராமன் முதலியோர் பிறப்பு. சீதை திருமணத்தின்முன்பு காமனை வென்ற இடமாகிய கானகம் கடந்துசெல்கிறான் இராமன்.

பெண்சுவை அறியாப் பெருந்தகையாகிய கலைக்கோட்டு முனிவரைக் குறிக்குமிடத்து, காமமும் வெகுளியும் களிப்பும் கைத்துஎழு கோமுனி.....

என்ற தொடர் வருகின்றது. இங்கும் திருக்குறள் நினைவு எழுவது இயற்கை. (தொடரும்........)

* 45 - காண்க. கம்ப 1424, 1425, 1426, 1427

# பதிற்றுப் பத்தின் சொற்கோவை

பேராசிரியர். அ. மா. பரிமணம்

## 5. சான்றோர் மெய்ம்மறை

வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகியவற்றை உரிய அளவில் கலந்து மெல்லுங்கால், ஆங்கே புதிய திறம், தன்மை, சுவை உண்டாவதனைப் பலரும் அறிவர். அவ்வாறே சொற்களைத் தக்க முறையில் இணைக்கும்போது அந்த இணைப்பு, சிறந்த கவிதைத் தொடர்களாய்ப் புதிய அழகு ஆற்றல் சுவை கொண்டனவாக அமையக் காணலாம். அத்தகைய கவிதைத்தொடர்கள் மிகுந்த யாப்புக்கள் சிறந்த கவிதைகளாக, அவற்றைப் படைத்தோர் சிறந்த கவிஞர்களாகக் கருதப்படுவர். அவர்களின் கவிதைகள் '*சவியுறத்தெளிந்த கவி* என்று போற்றப்படும. அத்தகு கவிதைகளின் தொகுப்பு 'பாட்டும் தொகையும்' காலங்கள் தோறும் இன்பம் பயந்து நிற்கும் கருவூலங்களாக மதிக்கப்படுகின்றன. எட்டுத்தொகையுள் ஒன்றாய்த் திகழும் '*பதிற்றுப்பத்து*' காத்தளிக்கும் பலவாய தொடர்களுள் '*சான்றோர் மெய்ம்மறை*' என்பது ஒன்றாகும்.

மறைத்தல், தடுத்தல் எனப்பொருள்படும் மறை எனும் வினைப்பகுதிச் சொல், மறைப்பது தடுப்பது என்று பெயர்ச்சொல்லாகி, வேதம், மந்தணம், களவுப்புணர்ச்சி, உருக்கரந்தவேடம், புகலிடம், கேடயம் முதலிய பலபொருளை உணர்த்தும் பாங்கினைத்தமிழ்ப்பேகராதி (**Tamil Lexicon**) எடுத்துக்காட்டுடன் விளக்குகின்றது. அவ்வாறமைந்த '*மறை*' என்னும் பெயர்ச்சொல், உடம்பினைக் குறிக்கும் '*மெய்*' என்னும் பெயர்ச்சொல்லை முன்னொட்டாகக் கொண்டு, '*மெய்ம் மறை*' என்றாகி உடம்பினை மறைப்பது, தடுப்பது என்று பொருள் தருவாதாக அமைகின்றது. இந்தப்பெயர்த் தொடராக்கம் சங்க நூல்களுள் பதிற்றுப்பத்தில் மட்டுமே இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இத்தொடர் பதிற்றுப்பத்தின் எட்டுப் பாடல்களில் (14-12;21-24;55-8;58-11;559-9;65-5;73-9;90-27) இடம் பெற்றுள்ளது. பதிற்றுப்பத்தில் மட்டிலுமே பாடிய காப்பியாற்றுக் காப்பியனாரும் (4-ஆம் பத்து),ஐந்து தொகை நூல்களில் பாடியுள்ள பரணரும் தவிர்த்து ஏனை ஆறு புலவர்களும் தம் பத்துக்களில் இத்தொடரைப் பயன்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

'*மெய்ம் மறை*' என்னும் தொடர்ப்பெயரைப்பழைய உரையாசிரியர், 'ஈண்டுச் சான்றோர் என்றது போரில் அமைதியுடைய வீரரை; மெய்ம்மறை - மெய்புகுகருவி; மெய்ம்மறை என்றது அச் சான்றோர்க்கு மெய் புகு கருவி போலப் போரிற் புக்கால் வலியாய் முன்னிற்றலின்; என்று விளக்கியுள்ளார். போர்வீரர்கள் - வில்,வேல் போன்றன கொண்டு போர்முனையிற் போரிடச் செல்லுங்கால், பகைவர் விடும அம்பு, பாய்ச்சும் வேல், ஓச்சும் வாள் ஆகிய கருவிகள் தம் மார்பினைத் தாக்கிச் சிதைக்கா வண்ணம் தற்காத்து மேற்செல்ல உதவும் வகையில், மார்பினை மறைக்கும் வகையில் உலோகத்தால், அல்லது புலித்தோல் போன்றவற்றால் ஆக்கப்பட்டு, அவற்றை அணிவர். அதுவே '*மெய்புகு கருவி*' எனப்படும். அது கவசம் எனவும் குறிப்பிடப்படும். பழங்காலத் தமிழகத்துப் போர் வீரர்கள், அணிந்த மெய்ம்மறையினை மெய்புகுகருவியின் கவசத்தை - இன்றும் போர்க்கருவிக் காட்சியகங்கள் சிலவற்றில் காணலாம். களிறு இவர்ந்து சென்ற சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, புலித்தோலால் அமைக்கப்பட்ட மெய்புகு கருவி (கவசம்) அணிந்திருந்தமையினை, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் தம்பாடலில்,

'இவனே, புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி யன்ன களிற்று மிசையோனே'

என்று காட்டியுள்ளார் (புறம் 13: 1-3).

போர்க்காலத்தில் வீரர்களேயன்றி, எல்லாக் காலங்களிலும் ஆடவர், தட்பவேப்பநிலை வேறுபாட்டில் தம் உடலைக்காக்கும் வகையிலும் நாகரிக மேம்பாட்டு நிலையிலும் பயன்படுமாறு, பட்டாலும் பருத்தியாலும் அன்னபிறவற்றாலும் அமைந்த அங்கிகளை(சட்டை)அணிந்தனர். அது, உடலினை இட்டுக்காக்கும் '*பை*'போல் விளங்கியமையால் '*மெய்ப்பை* எனப்பட்டது. பண்டைத் தமிழ்ப் பெருவேந்தர் போர் வேட்டுப் பாசறையில் தங்கும்போது ஆங்கு யவனர்(சோனகர்) 'தாழ்ந்து செறிந்த உடையோடும், மெய்ப்பை புக்கிருந்த மெய்யோடும் காவலராய்' விளங்கிய பாங்கினை முல்லைப்பாட்டு தெரிவிக்கிறது (முல். 59,60) இங்கு

மெய்ப்பை என்பதற்குச் சட்டை என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். வீரர்களே யன்றி அரண்மனைத் தொடர்புடைய பிற தொழில் மாக்களும் மெய்ப்பை அணிந்திருந்ததனை 'மெய்ப்பை புக்கு விலங்கு நடைச்செலவின்' என்று இளங்கோவடிகள் காட்டுவர் (சிலப் கொலைக். 107)

வீரர்தம் உடலினைக்காக்கும் மறையாக - மெய்புகுகருவியாக மட்டுமல்லாமல் அதனினும் உயர்ந்த பொருள் அமையுமாறு இத்தொடரை அமைத்துப் பாடிய பெருமை, பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்குரியது. அவரால் பாடப்பெற்ற இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தன்னைப் பொறுத்தமட்டில் மாவீரனாகத் திகழ்ந்ததோடு, தன் படைவீரர்களுக்கெல்லாம் கவசம்போல, கேடயம்போல படைமுன்சென்று காக்கும் தீரனாகவும் விளங்கினான் என்னும் கருத்தில் '*மெய்ம்மறை*' என்று அவனது வீரத்தை உருவக வகையால் சிறப்பித்துள்ளார். அம்மன்னனை வீழ்த்தினாலன்றி அவனுடைய படைவீரர்கள் அழித்தல் இயலாது என்பது கருத்து. படையின் முதன்மைத்தலைவர்கள், இராணுவ அமைப்பின் எங்கோ ஓரிடத்திலிருந்து கொண்டு, தங்கள் கணைகள் வழிப்படைவீரர்களை இயக்குவது இக்கால இராணுவப்போர் முறை. அத்தலைவர்களின் இருப்பிடமும் இயக்கமும் மந்தணமாகப் போற்றப்படும். அரசனே முன் நின்று போர்முனையில் முற்பட்டுச்செல்வதும், தன் படைவீரர்க்குத் தானே காப்பாக அமைந்து விளங்குவதும் அக்காலப் போர் முறையாகும். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று கருதியிருந்த அக்காலப் போர் மரபிற்கும் இக்கால மரபிற்கும் எத்துணைவேறுபாடு!

குமட்டூர்க் கண்ணனார், '*மெய்ம்மறை*' என்னும் உருவகத்தொடர்ப் பெயருக்கு முன்னொட்டாகச் '*சான்றோர்*' என்னும் சொல்லைச் சேர்த்து வீரர்களுக்குக் கவசம் போன்றவன்; என்னும் கருத்தில் '*சான்றோர் மெய்ம்மறை*' என்ற தொடரைப் படைத்து அதனால் இமயவரம்பன் அடி பிறக்கிடாத போர்வீரர்களைக் குறிக்கும். '*சான்றோர் மெய்ம்மறை*' எனும் தொடரும் பிறதொகை நூல்களில் காணப்படவில்லை. பதிற்றுப்பத்தின் 6ஆம் பதிகத்தைப்பாடிய காக்கை பாடினியார் தாம் போற்றிப்பாடிய ஆடுகோட்பாட்டுச்சேரலாதனை, 'ஏந்தெழில் அகத்துச் சான்றோர் மெய்ம்மறை' (58-11) என்று இத்தொடரைப் பயன்படுத்தி உருவகப்படுததியுள்ளது குறிப்பிடத்தக்கது. பதிற்றுப்பத்தின் பாடல்களுக்குப் பெயர் சூட்டிய பாவலர்.

இத்தொடர்ப்பொருளின் சிறப்பையும் நயத்தையும் உணர்ந்து இதனைப் பாட்டின் பெயராக (14-12) அமைத்திருப்பது அறிந்து இன்புறத்தக்கதாகும். ஏனைய பதிற்றுப்பத்துப் புலவர்கள் '*சான்றோர்* என்பதற்கு மாற்றாக, மழவர், வில்லோர், பூழியர் என்னும் சொற்களைப் பயன்படுத்திப் போற்றியுள்ளனர். இவற்றில் '*வில்லோர்* (59-9265-5) என்பது வில்லேந்திய வீரர் என்னும் பொதுப் பொருளையும், வில்லினை இலச்சினையாகக் கொண்ட சேரவீரர் என்னும் சிறப்புப் பொருளையும் தந்து நிற்கக் காணலாம். அவ்வாறே மழவர் என்பது பொதுவாக வீரர் என்னும் பொருள் கொண்டதாகும். பூழியர் என்பது பூழிநாட்டார் என்று பொருள்படும் பாண்டி நாட்டிற்கும் சேரநாட்டிற்கும் இடைப்பட்டு விளங்கியநாடு பூழி நாடு ஆகும். அப்பகுதி ஒருகால் பாண்டியராலும், பிறிதொருகால் சேரராலும் மாறிமாறி ஆளப்பட்டுள்ளமையால் இருநாட்டு வேந்தர்களும் தம்மைப் '*பூழியர்கோ*' என்று கூறிக்கொண்டதனை இலக்கியத்தாலும் வரலாற்றாலும் அறியலாம்.

பண்டைத் தமிழ்வேந்தர்களின், குறிப்பாகச் சேர வேந்தர்களின் வீரச்சிறப்பினைப் புலப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ள '*மெய்ம்மறை*' என்னும் பெயரும்,'*சான்றோர் மெய்ம்மறை*' என்னும் தொடரும் பதிற்றுப்பத்து, காத்துவழங்கும் அரிய சொற்கொடையாகும்.

மறை என்னும் சொல் வெயில் என்னும் முன்னொட்டுப்பெற்று வெயிலைத் தடுத்து மறைத்துக் காக்கும் குடையினைக் குறிக்கும் தொடராகப் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. வெள்ளைக்குடி நாகனார் சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறுங்கால், 'வேந்தே, உனது வெண்கொற்றக்குடை, வெயிலை மறைத்தற்காகக் கொள்ளப்பட்டதன்று' வருத்தமுற்ற குடிமக்களை நிழல் தந்து காப்பதற்காகக் கொள்ளப்பட்டது' என்று கூறுகின்றார்.

'.....நின் விண்பொருவியன்குடை
வெயில் மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடி மறைப்பதுவே கூர்வேல் வளவ' (புறம் 35:19-21)

என்பது புலவரின் அறிவுரை. இங்கு '*வெயில்மறை*' என்பது '*வெயிலை மறைப்பது*' என்னும் பொருளில் இடம்பெற்றிருப்பது நினைக்கத் தக்கதாகும். (தொடரும்.......)

# உன்னத உடல் நலம் தரும் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை - 625 107. போன் : 588741-56
Fax : 536535 E-mail:mmhrc@md2.vsnl.net.in


*ஜோ ஆப்செட், மதுரை-1.* ☎ **743063**